ORIGINAL ARTICLE

# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் [TAMIḺMOḺIK KAṞṞAL KAṞPITTAL]

# TEACHING TAMIL LANGUAGE LEARNING

**பா.பாக்கியலட்சுமி / P. Bhakkialakshmi** *1

[1] Aringnar Anna Arts and Science College, VilupuramTamilnadu, India.
Email: tamizhbhakkialakshmi@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/162

**Abstract**

This study shows that in this prevailing lifestyle and system of education, our younger generations of elementary students are far behind in reading and loving their mother tongue. Therefore, the need for new approaches in the teaching of Tamil language learning to change this situation, the qualifications of language teachers, and the role of language teachers in developing the ability of students is highlighted in this research. This topic initially deals with the characteristics of a good teacher, which should be based on languages, new ways to recall the learned content to the students, methods that a teacher should improve themselves, and some new approaches to teaching lessons. This study is based on the texts. The primary texts of this study are Language Teacher Characteristics and Language Training, New Approaches in Teaching Tamil Way Part-1, Tamil Teaching. The role of language teachers in improving the skills of students and in simplifying the understanding of the difficult nature of education is also evident. It is expected to be very helpful to language teachers in teaching Tamil language learning. The teaching techniques used by the ancestors and the teaching techniques relevant to the contemporary context are mentioned. We must properly teach our students the pride and usage of the language.

**Keywords:** Author, Manivasakap Perunthakai, Arutpa, Vallalar, Review, Bright Students, Simplicity from Hardness.

**ஆய்வுச் சாரம்**

இந்த ஆய்வு இன்றைய காலச் சூழலிலும், கல்விச் சூழலிலும் நம் இளம் தலைமுறையினரான தொடக்கநிலை மாணவர்கள் தாய்மொழியை வாசிப்பதிலும் நேசிப்பதிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். ஆகவே இந்நிலையை மாற்ற தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் தேவை என்பதும் மொழியாசிரியர்களுக்கு உரிய தகுதிகளும், மாணவர்களின் திறனை வளர்ப்பதில் மொழியாசிரியர்களின் பங்கும் இவ்வாய்வில் எடுத்துக்கூறப்படுகிறது. இத்தலைப்பில் முதலில் நல்லாசிரியர் பண்புகளும், மொழிகளில் அடிப்படையாக இருக்க வேண்டியவையும், படித்த மாணவர்களுக்கு நினைவுபடுத்த புதிய முறைகளும், ஆசிரியர்கள்

தாங்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டிய முறைகளும், பாடம் கற்பிக்க மேலும் சில புதிய அணுகு முறைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, நூல்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றது. இவ்வாய்வின் முதன்மை நூல்களாக மொழி ஆசிரியர் பண்புகளும் மொழிப் பயிற்சியும், தமிழ்வழி கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள் பாகம்1, தமிழ் கற்பித்தல் ஆகிய நூல்களைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாணவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் கல்வியின் கடின தன்மையை புரிந்துக்கொண்டு எளிமை படுத்தி தருவதிலும் மொழி ஆசிரியர்களின் பங்கும் புலப்படுகிறது. இது தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மொழி ஆசிரியர்களுக்கு மிகவும் துணையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னோர்கள் பயன்படுத்திய கற்பித்தல் உத்திகளும், இக்கால சூழலுக்கேற்ற கற்பித்தல் உத்திகளும் கூறப்பட்டுள்ளது. நம் மாணவர்களுக்கு மொழியின் பெருமையையும் பயன்பாட்டையும் நாமே சரிவர கற்றுத்தரவேண்டும்.

**கருச்சொற்கள்:-** நல்லாசிரியர், மணிவாசகப் பெருந்தகை, அருட்பா, வள்ளலார், மீள்பார்வை, மீத்திறன் மாணவர்கள், கடினத்தன்மையிலிருந்து எளிமையாக்கல்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 22nd May 2021, revised 29th June 2021, accepted 5th July 2021

**முன்னுரை**

ஆசிரியர் பழைய முறைகளைப் பின்பற்றியே பாடத்தை நடத்திக் கொண்டிருப்பார். ஆனால், அவரை வளர்ந்து வரும் புதிய உலகைப் பற்றி சிந்திக்காதவர் என துணிந்துக் கூறலாம். "கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த பாடமும் அதிக நாள் வராது எனும் பழமொழிக்கு ஏற்ப இன்றைய கால மாணவர்களுக்கு தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய கற்பித்தல் அணுகு முறைகள் தேவைப்படுகிறது.

**நல்லாசிரியர்**

காலத்திற்கேற்றவாறு புத்தம் புதிய முறைகளை நூல்களின் துணைகொண்டு நன்கு உணர்ந்து வகுப்பறைகளை செயல்படுத்த வேண்டுவது நல்லாசிரியருக்கு அழகாகும். இதனை நன்னூலார் ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே''என்றார் புதிய முறைகளை கையாளுகின்ற பொழுது மாணாக்கர்களுக்கு பாடத்தில் பற்றும், விருப்பும் ஏற்படுவது இயற்கையே. எனவே ஆசிரியர்கள் காலத்திற்கேற்ற புதிய முறைகளை கற்று அதன்வழி பாடம் கற்பிக்க முன்வரவேண்டும். மணிவாசகப் பெருந்தகை சொற்களைக் கேட்ட அளவிலேயே அங்கிருந்த பறவையினங்களும் பொல்லா விலங்குகளும் விரும்பி உண்மை அறிவினை பெறுகின்றனவாம். அதனை ''வாட்டமிலா மாணிக்க வாசக நின் வாசகத்தை கேட்ட பொழுது அங்கிருந்த கீழ்ப் பறவைச்சாதிகளும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும் எனில் இங்கு நான் அடைதல் வியப்பன்றே''என இராமலிங்க அடிகள் அழகுற கூறுவார். அஃறிணை உயிர்களே நல்ல சொற்களைக் கேட்ட அளவிலேயே மெய்ஞானம் பெறுகின்ற பொழுது

ஆசிரியர் பெருமக்களின் வாயினின்று விழைவுடன் புறப்பட்டு வரும் சொற்களை மாணவர்கள் கேட்பின் விருப்பமுற்று பாடத்தை ஆர்வத்துடன் பயிலுவர் என்பது திண்ணம்.

**மொழிக் கற்றலில் அடிப்படையாக இருப்பவை**

தமிழில் படித்தல் திறன் வளர எழுத்து அறிதல், எழுத்தை இணைத்துப் படித்து சொற்களை இணைத்துப் பிழையின்றி எழுத அறிதல், சொற்களுக்கான படங்களை அறிதல், சொற்களை இணைத்து தொடர் வாக்கியம் அமைத்தல், பேசுதல். 2 ஆகியவை ஆகும்.

கற்ற எழுத்துகளை செய்தித்தாளில் மீள்பார்வை செய்தல்: ஒவ்வொரு நாளும் மாணவர்களது ஏற்புத் திறனுக்கு ஏற்றவாறு ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை எழுதிக் காட்டி எழுத்து அறிமுகம் செய்த பிறகும், மாணவர்கள் அந்த எழுத்துகளை நன்கு பயிற்சி செய்த பிறகும் அடுத்த நாளில் அந்த எழுத்துக்களைச் செய்தித்தாளில் வட்டமிட்டு மீள்பார்வை செய்ய பயிற்றுவித்தல் வேண்டும். வரியொற்றித் தேடுதலை முதன்மைப்படுத்த வேண்டும். இதனை வகுப்பறையில் ஒவ்வொரு நாளும் 15 மணித்துளிகள் நிகழ்த்த வேண்டும். மீத்திறன் மாணவர்களின் அருகில் மெதுவாக கற்போரை அமர்த்தி ஊக்குவித்தல் செய்யலாம்.

மாணவர்களிடையே படைப்பாற்றல் திறனை வளர்ப்பது கல்வியின் ஒரு முக்கிய குறிக்கோளாகும். சிக்கலைத் தீர்த்தல் முறையில் பாடங்களை நடத்தும் முறை சாலச்சிறந்தது. மாணவர்களின் விரிகின்ற நினைவாற்றலை வளர்க்க ஆசிரியர்கள் பாடுபட வேண்டும். அதேபோல் பக்கவாட்டு நினைவாற்றலையும் அதிகரிக்க ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும். மேலும் திறந்தநிலை கேள்வி-பதில் பயிற்சி முறையை செயல்படுத்த வேண்டும். சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப தயார் செய்தல் சிறப்பானது. புதிய நிகழ்ச்சிகளையும் திறன்களையும் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் மாற்றிட ஆசிரியர்களும் மாணவர்களும் முயலவேண்டும். தானாகவே ஆரம்பித்து படிக்கும் பயிற்சியை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும் ஆக்கப்பூர்வமான விமர்சனம் செய்யும் திறமையை வளர்த்துக்கொள்ள ஆசிரியர்கள் முயற்சி செய்ய வேண்டும் (Ponniah,2019)[1].

மொழி ஆசிரியரிடம் இருக்க வேண்டிய தகுதிகள்: மாணவர்களிடையே ஈர்ப்பு கவனம் முதலியவற்றை ஏற்படுத்தும் வகையில் ஆசிரியருக்கு உரிய தகுதிகளாக பிரபலக் கல்வியாளர் 'ஹர்பர்டின்' பிபாகா எனப்படும் ஐந்து படிநிலைகளை கூறியுள்ளார்3 பிரிப்பேரேசன், பிரசெண்டேஷன், அசோஷியேஷன், ஜெனரலிசேசன் அப்ளிகேஷன், மனதில் மறவாமல் திட்டமிட்டு செய்பவராய் ஆசிரியர் இருக்க வேண்டும். என்றும் பணிமீது பற்று, மொழிப்பற்று, தகுந்த புலமை, ஈர்ப்புடன் ஏற்ற இறக்கம் காட்டி எடுத்துரைக்கும் திறன் ஆக்கமும் ஊக்கமும் எழுச்சியும் கொண்ட மாணவர்களை இணைக்கும் மாண்பு மாணவர் மனமறிந்து பயிற்றும் நிலை, சினம் தவிர்த்து மக்களை நெறிப்படுத்தும் தன்மை, நல்லொழுக்கம், நடுவுநிலைமை , பெருந்தன்மை பற்று, உடலைப் பாதுகாத்தலில் ஆர்வம், உலக பொது அறிவியல், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் ஆகிய குணங்களைக் கொண்டு இருத்தல் நன்று (Kumar, 2020)[2].

தமிழில் கற்பிக்க மிகமிக எளிமையான சொற்களை பயன்படுத்த வேண்டும். கற்பதற்கு கடினம் இல்லாத பழக்கப்பட்ட பொருட்களாக இருந்தால் அதுவே கற்ற கல்வியை தெளிவாய் உள்வாங்கி உரிய பயனை அடைய ஏதுவாய் இருக்கும்.

## புதிய உத்திகள்

இன்றைய மாணவர்களிடம் விவாத முறை நல்ல பயனை உருவாக்கியுள்ளது. மாணவர்களிடம் கேள்வி கேட்பது, கருத்து உருவாக்கம் செய்வது போன்றவை அவர்களிடம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. நீண்ட சொற்பொழிவாக அமையாமல் விளையாட்டுப் போக்குடன், நாடகப் பாங்குடன், ஆடல் பாடல், இசை, நடிப்பு, உடல் அசைவுகளுடன் பாடம் கற்பித்தல் மேலான பயனை தந்துள்ளது.

எல்கேஜி, யுகேஜி மாணவர்கள் ஆசிரியர்களின் நடிப்பு, நடை உடை பாவனை, அசைவுகளை அப்படியே போலச்செய்தல் பாங்கில் செய்யும் முறை நமக்கு இதன் உண்மையை உணர்த்தும். குருகுலக் கல்வி காலத்திலும் அதனை தொடர்ந்த காலங்களிலும் ஆசிரியர் முதன்மை இடம் பெற்றிருந்தனர். ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் பாடுபொருள் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இன்று கற்பித்தலில் மாணவர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். எந்தக் கல்வியும் கடினமானது அல்ல என்பதை மாணவனுக்கு பல்வேறு கற்பித்தல் வழி உணர்த்தி இறுதிநிலை மாணவனையும் முன்னுக்குக் கொணர்வதே சிறந்த கற்பித்தல் முறையாகும் (Ponniah,2020)[3]. பழங்காலத்தில் மனனம் செய்வது ஒரு உத்தி. இன்று உய்த்து உணர்வது ஒரு உத்தியாக உள்ளது. நாளைய உத்தி புரிந்துணர்தல், புதிய ஆற்றல் ஊட்டுவது ஆகும் இதற்கு பாடங்களை எளிமையும் இனிமையும் வாய்ந்ததாக மாற்றுதல் அவசியம் தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவது போன்றது. இது பழமையானது எனினும் இன்றும் நடைமுறையில் உள்ளது. இன்றைய பெரும்பாலான ஆசிரியர்கள் விரிவுரை உத்திகளைக் கையாளுகின்றனர் இதனை நன்னூலார் 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல், ஓசை உடைமை, ஆழம் உடைத்தாதல், முறையின் வைப்பே உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தாகுதல் நூலிற்கு அழகு எனும் பத்தே என்று குறிப்பிடுவது நூலுக்கு மட்டுமின்றி இது கற்பித்தலுக்கும் பொருந்துவதாகும்.

## பாடத்தைத் தொடங்கும் திறன்

கற்பித்தல் செயல்முறையில், பாடத்தை தொடங்கும் முறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. எனவே இதனைத் தனித்திறனாகக் கொண்டுள்ளனர். எடுத்த எடுப்பிலேயே பாடம் தொடங்கும் முறையால் பாடம் அறிமுகம் செய்யும் தன்மையால் ஆசிரியர் சிலர் மாணவர்களின் கவனத்தை அப்பாடம் நடத்தி முடிக்கும் வரை மாணவர்களின் கவனத்தை ஈர்த்து விடுகின்றனர். "நல்ல தொடக்கம் பாதிப்பணியை முடித்ததற்கு ஒப்பாகும் "என்பது கற்பித்தலிலும் பொருத்தமாக அமைகிறது. பாடம் தொடங்குவதில் சில நுட்பமான முறைகளை பயன்படுத்தினால் பாடப்பகுதி சிறந்து விளங்கும் (Kanapathy, 2015)[4]. அவைகள் முன்னறிவுத் தொடர், ஏற்ற விடை தந்தமை, தொடர்ச்சி, பொருத்தமான தொடர், தொடங்கும் முறை.

## முன்னறிவுத் தொடர்

மாணவர்களின் முந்தைய அறிவையும் தகுந்த முறையில் இணைத்து தருதல் வேண்டும் (Ponniah, 2017)[5]. கருத்தைச் சில தொடர்களில் ஆசிரியர் நினைவூட்டல் அல்லது அவ்வாறு நினைவூட்டுவதாக சில வினாக்களை கேட்கலாம்.

**ஏற்ற விடை தந்தமை**

முன்பு பெற்ற அறிவை நினைவுபடுத்துவதாக வினாக்கள் கேட்கப்படும்போது அவற்றில் ஏற்ற விடை தந்தவை எத்தனை எனவும், எ அறிந்து ஏற்ற விடை தந்தவை மிகுதியாய் இருப்பின் பாடம் நன்கு தொடங்கப்படுகிறது என்றும் ஏற்ற விடைகள் இல்லையாயின் தொடக்கம் சரியில்லை என்றும் நாம் அறியலாம்.

**தொடர்ச்சி**

ஆசிரியர் கூறும் தொடர்கள் மூலம் மாணவர்கள் பெறும் புதிய அறிவு அவர்கள் ஏற்கனவே பெற்ற அறிவின் தொடர்ச்சி போன்றதாக அமைதல் வேண்டும் (Thamburaj & Sivanathan, 2020)[6]. தொடர்கள் அத்தொடர்ச்சியை உணர்த்துகின்றனவா என்று அறிதல் வேண்டும்.

**பொருத்தமான தொடர்**

பொருத்தமான புறம்பான தொடர் பாட நேரத்திற்குப் பொருத்தமான தொடர்கள் மிகுதியாக வரும்படியும் பொருத்தமில்லாத தொடர்கள் வராதபடி திட்டமிட்டு கொள்ளுதல் வேண்டும்.

**தொடங்கும் முறை**

புதிய பாடத்துடன் ஒப்புமை உடைய கருத்துக்களை கூறி தொடங்குதல் வினாக்களைக் கேட்டு விடைகளை வரவழைத்து தொடங்குதல். விளக்குதல், வருணித்தல், சொற்பொழிவுகள் மூலம் தொடங்குதல், கதைகள் கூறித் தொடங்குதல் ,நடித்தல் முறை மூலம் தொடங்குதல், துணை கருவிகளைப் பயன்படுத்தி தொடங்குதல் செய்து காட்டல் மூலம் தொடங்குதல்.

தமிழ்மொழிக் கல்வி வாழ்க்கை நடத்தத் தேவையான திறன்களை பெற்றுத்தரும் கல்வி முறையாகும் மக்களின் நாகரீக வாழ்க்கைக்கு அவர் தம் தாய்மொழி இன்றியமையாதது. மக்களை விட்டு மொழியும், மொழியை விட்டு மக்களும், உயிர் வாழ்தல், சிறிதும் இயலாது என்பார் மறைமலை அடிகளார். மனிதனுடைய தனித்தன்மையின் பூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி என்பார் சுவாமி விவேகானந்தர்.6மனிதன் வாழ்வது உடலால் மட்டுமன்றி முழு மனிதனாக செயல்படுவதற்கு கல்வி தேவை என்பார் தேசத் தந்தை காந்தியடிகள். தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களை தம்பால் கவரும் திறன் தேவை மாணவர்களுக்கு அவர்கள் கற்பிக்க வேண்டிய திறன்கள் . 1 அடிப்படைத்திறன்கள் 2. பிறதிறன்கள்

**அடிப்படைத்திறன்கள் 5**

ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்றுத்தர வேண்டியவை அடிப்படை திறன்கள் அவை பேசும் திறன், படிக்கும் திறன், எழுதும் திறன், உணரும் திறன்.

### பிற திறன்கள்

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிற்சி அளிக்க வேண்டிய திறன்கள் 8. செய்தி திரட்டும் திறன், கேள்வி கேட்கும் திறன், கட்டுரை எழுதும் திறன், சுருக்கி வரைதல் திறன், மொழி ஆக்கத்திறன், படைப்புத்திறன், உரையாடல் திறன் (Thamburaj, 2015)[7].

### இன்றைய தமிழ்ச் சமூகம் காட்டும் வழி

நாம் எழுந்ததிலிருந்து இரவு படுக்கும் வரை ஆங்கிலச் சொற்களை அதிகம் பயன்படுத்தி வருகின்றோம். நம்மில் எத்தனை பேர் பேருந்து, காலம், மிதிவண்டி, காலை உணவு, மின்விளக்கு, மின்விசிறி என கூறுகிறோம். நன்றி வணக்கம் என்பது கூட மறைந்து குட்மார்னிங் முதல் குட்நைட் வரை செல்கிறது. பாரதி தெருவெல்லாம் தமிழ் மொழி ஒலிக்க வேண்டும் என்று கூறியுள்ளார் அந்த நிலையை நாம் அடைய கட்டாயம் நம் ஒவ்வொருவரிடத்திலும் இருந்தும் மாற்றம் ஏற்பட வேண்டும். நம் தாய்மொழி வீட்டுக்கு முன்வைக்கும் விசாலமானது கதவு போன்றது. அந்நிய மொழிகள் வீட்டில் வைக்கப்படும் சாளரங்கள் போன்றது. தமிழின் இன்றைய நிலைக்கு தொலைக்காட்சி ஒரு பெரிய கேடு விளைவித்துக் கொண்டு தான் வருகிறது. எத்தனை தொலைக்காட்சிகள் தாய் மொழிக்கு முக்கியத்துவம் தருகின்றன. ஆடல் பாடல் நிகழ்வுகளை மட்டுமே நிகழ்த்தி மக்களின் நேரத்தை வீணாக்குகின்றனர். ஒவ்வொருவரின் முன்னேற்றம் கருதி பலரும் தங்கள் நேரத்தை வீணடிக்கின்றனர் இந்த அவல நிலை தொடர்ந்தால் என்ன நிலை ஏற்படும் குழந்தைகளுக்கு தமிழ்மொழி அன்பினை, அறிவினை, மரியாதையை, வாழ்வினை, வாழ கற்றுக் கொடுக்கும் ஒரு உயரிய மொழி அம்மொழியின் பண்பினை நாம் ஓரளவு அறிந்து கொண்டதே நமக்கு இவ்வளவு உயர்வை தந்துள்ளதே. இதுவரை நம் மொழியில் தோன்றியுள்ள இலக்கண இலக்கியங்கள் 2% ஓலைச்சுவடிகளின் பதிப்புகளே ஆகும். (படம்-அகவன்) நீ என்பதற்கும் நீங்கள் என்பதற்கும் எவ்வளவு வேறுபாடு, எவ்வளவு மரியாதை என்பதை நம் மொழி மட்டுமே உணர்த்துகிறது. இப்படிப்பட்ட நம் தாய்மொழியின் அருமை பெருமைகளை நம் சந்ததியினரும் எதிர்காலச் சந்ததியினரும் உணர நாமே வழிகாட்ட வேண்டும் ஆனால் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்.

### முடிவுரை

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சரியான ஒலிப்புப் பயிற்சியை ஆரம்ப நிலையிலிருந்து கொடுத்தால் பிழையின்றிப் பேசவும் படிக்கவும் எழுதவும் செய்யலாம்.

### References:

1. Ponniah, K., Kumar, M., Moneyam, S., & Sivanadhan, I. (2019). The teaching of Thirukkural based on HOTS among the students of Tamil primary schools in the state of Perak. *International Journal of Advanced and Applied Sciences*, *6*(2), 94-101.
2. Kumar, M., & John, S. (2020). Attitude of Higher Secondary School Teachers towards the Use of Magic Tricks in the Classroom. Academic Journal of Interdisciplinary Studies, 9(2), 47-47.

3. Ponniah, K., Pandi, P., Muniisvaran, K., & Saravanakumar, A. R. (2020). The purpose of conversation using proverbs among Tamil language teachers in national type Tamil primary schools. *Journal of Critical Reviews*, *7*(9), 31-31.
4. Kanapathy, K. (2015). An Assessment of Tamil Phonology Acquisition in Second Language Learning Context. *Asian Journal of Assessment in Teaching and Learning,* 5, 44-49.
5. Ponniah, K., Thamburaj, K. P., & SamuvelI, S. J. I. (2017). Language attitude among Tamil language teachers. *International Journal of Advanced and Applied Sciences*, *4*(6), 142-147.
6. Pal Thamburaj, K., & Sivanathan, S. (2020). Marapu vaḻi eḻututal tiṟaṉum taṟkāla eḻututal tiṟaṉum oru pārvai [A study on modern and traditional writing skill]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(4), 141-146. https://doi.org/10.33306/mjssh/103
7. Thamburaj, K. P., Arumugum, L., & Samuel, S. J. (2015, August). An analysis on keyboard writing skills in online learning. In 2015 International Symposium on Technology Management and Emerging Technologies (ISTMET) (pp. 373-377). IEEE.